**Starting time 11.36 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.108/2004**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 06.08.2004 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிகண்டன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** தாவா சொத்து பிரதிவாதி கருப்பண்ண கவுண்டருக்கு மட்டுமே பாத்தியப்பட்டது அல்ல என்றும், அவரது மகளுக்கும் பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல, அவருக்கு மட்டுமே பாத்தியப்பட்டது. இருவருக்கும் உரிமையானது என்பதால் தான் வா.சா.ஆ.4 ஆவணத்தை இருவரிடம் இருந்தும் பெறப்பட்டுள்ளது என்றால், ஆமாம். அதனால் சொத்தை விற்பதற்கு பிரதிவாதிக்கு மட்டுமே உரிமை இல்லை என்றால், சரியல்ல.

2. வா.சா.ஆ.4 குதவைக்கு வட்டி எதுவும் அவர் கொடுக்கவில்லை என்றால், ஆமாம். குதவைக்கு கொடுக்கவேண்டிய வட்டிக்காகத்தான் தாவா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால், அதற்கும், இதற்கும் சம்மந்தமில்லை. பிரதிவாதிக்கு படிக்கத் தெரியாது என்பதால் அதை பயன்படுத்தி வட்டிக்காக ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால், சரியல்ல, அது பொய்.

3. பிரதிவாதி சொத்தை விற்பனை செய்வதாக கூறவும் இல்லை, என் தகப்பனார் அதை கிரயம் பெறுவதாக சொல்லவும் இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக

பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல. ஒப்பந்த தேதியன்று பிரதிவாதி ரூ. 30 ஆயிரம் பணம் வாங்கிக் கொண்டதாக நான் கூறுவதே பொய் என்றால், சரியல்ல. கிரய ஒப்பந்தத்திற்கு 1-1/2 வருடம் வாய்தா எழுதப்பட்டுள்ளது என்றால், ஆமாம்.

4. உண்மையான ஒப்பந்தமாக இருந்தால் 1-1/2 வருட வாய்தா எழுத வேண்டிய அவசியமே இல்லை என்றாலும், பொய்யாக அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல. ஒப்பந்த தேதியிலிருந்து அறிவிப்பு அனுப்பும் வரையிலும் நான் கிரய ஆவணத்தை ஏற்படுத்திக் கொள்ள விருப்பம் தெரிவிக்கவில்லை என்றால், சரியல்ல, நான் தயாராகத்தான் இருந்தேன்.

5. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சங்கதிகளை மறுத்து பிரதிவாதி எனக்கு வா.சா.ஆ.7-ல் பதிலறிவிப்பு அனுப்பினார் என்றால், ஆமாம். வா.சா.ஆ.7ல் உள்ள சங்கதிகளை மறுத்து நான் கூடுதல் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால், ஆமாம். நான் மீண்டும் பிரதிவாதிக்சகு 05.03.2004 தேதியன்று வா.சா.ஆ.8ல் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால், ஆமாம். அதற்கும் பிரதிவாதி பதில் வா.சா.ஆ.9ல் கொடுத்துள்ளார் என்றால், ஆமாம்.

6. வா.சா.ஆ.9ல் கூறப்பட்டுள்ள சங்கதிகளை மறுத்து நான் மீண்டும் கூடுதல் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால், ஆமாம். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானது என்பதால் தான் நான் மறு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால், சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து யாருக்கு வில்லங்கம் ஏற்படுத்த முயற்சி செய்தார் என்பதற்காக ஆதாரம் எதுவும் இல்லை என்றால், ஆமாம்.

7. ஒப்பந்த தேதி அன்று தாவா சொத்து ரூ. 2 லட்சம் மதிப்பு தேறும் என்பதால் அவர் ரூ. 65 ஆயிரத்துக்கு விற்கவேண்டிய அவசியமில்லை என்றால், சரியல்ல, அந்த சமயத்தில் அதனுடைய மதிப்பு அவ்வளவுதான். என்னுடைய தகப்பனார் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியில் வைத்து தான் பிரதிவாதியிடம் கையொப்பம் பெற்றார்

என்றாலும், உள்ளே வந்து அவர் கையொப்பம் பெறவில்லை என்றாலும், சரியல்ல.

8. 20.02.2004- தேதியன்று பிரதிவாதி எங்களிடம் நேரில் வந்து பேசியதாக நான் கூறுவது பொய் என்றாலும், அதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்றாலும், சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் குதவைக்காக வாங்கிய பணத்தை வட்டியுடன் திருப்பி செலுத்துவதாக கூறியுள்ளார் என்றால், ஆமாம். அதை மறுத்து நான் பதில் எதுவும் போடவில்லை என்றால், ஆமாம்.

9. என் தகப்பனாருக்கு பிரதிவாதி கொடுக்க வேண்டிய தொகைக்கு வட்டியுடன் திருப்பி செலுத்த அவர் தயாராக உள்ளார் என்றாலும், ஒப்பந்தமே பொய்யானது என்றாலும், சரியல்ல. கிரய ஒப்பந்த பத்திரமே பிரதிவாதிக்கு படித்துக் காட்டாமலும், அவருக்கு தெரிவிக்காமலும் நாங்களாகவே ஏற்படுத்திக் கொண்டோம் என்றால், சரியல்ல. பிரதிவாதி படிப்பறிவு இல்லாதவர் என்றால், ஆமாம்.

10. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் பிரதிவாதிக்கு அதன் சங்கதிகள் படித்துக் காண்பிக்கப்பட்டதாக எந்த வாசகமும் இல்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.1-ஐ பிரதிவாதியிடம் படித்துக் காண்பிக்காததால் தான் அது சம்மந்தமான சங்கதியே அதில் இல்லை என்றால், சரியல்ல, படித்துக் காண்பித்தோம். பொய்யாக வா.சா.ஆ.1- ஐ தயார் செய்து பொய்யான வழக்கு தாக்கல் செய்திருப்பதால் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

11. கிரயப்பத்திரம் எதுவும் பிரதிவாதி எழுதிக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்றாலும், குதவை பணம் மட்டும் கொடுத்தால் போதுமானது என்றாலும், சரியல்ல. வ.சா.ஆ.10-ல் என் தகப்பனார் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்காக கையொப்பம் செய்துள்ளார் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.10 ஏற்படுத்துவதற்கு முன்பாகவே பிரதிவாதி பதிலறிவிப்பு அனுப்பிவிட்டதால் அவர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவேண்டிய அவசியமே இல்லை என்றால், சரியல்ல.

12. அதனால் இந்த வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்

என்றால், சரியல்ல. வா.சா.ஆ 1 ஏற்படுத்தப்பட்டது பற்றி எனக்கு நேரில் தெரியாது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.11-லும் என் தகப்பனார் வழக்கிற்காக கையொப்பம் செய்துள்ளார் என்றாலும், அதற்கு முன்பாகவே பிரதிவாதி பதிலறிவிப்பு அனுப்பிவிட்டார் என்றாலும், சரியல்ல. எனக்கு தெரியாத சங்கதிகளை குறித்து வேண்டுமென்றே எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்டது மற்றும் அதற்கு பின்னிட்டு நடந்தது பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

Ending Time: 11.58 A.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**